

மாணவர்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மெட்ரோ ரெயில் நிர்வாகம், சென்னை சென்ட்ரலில் இருந்து மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு மெட்ரோ ரெயிலில் மாணவர்களை அழைத்து செல்வதை படத்தில் பார்க்கலாம்.

# மெட்ரோ ரெயிலில் பள்ளிக்கூட மாணவர்கள் பயணம்!

## 200 நாட்களில் 26,000 பேர் பங்கேற்பு!!

சென்னை. பிப். 5– சென்னையில் மாணவர்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மெட்ரோரெயில்நிர்வாகம், அரசு பள்ளிக்கூடம், மாநகராட்சி பள்ளிக்கூடம், அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்களில்பயிலும் மாணவர்களை மெட்ரோ ரெயிலில் அழைத்து செல்வது கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

சென்ட்ரலில் இருந்து மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கும் டி.எம்.எஸ்.சில் இருந்து விமான நிலையத்திற்கும் மாணவர்கள், மெட்ரோ ரெயிலில் அழைத்து செல்லப்பட்டனர்.

கடந்த ஜனவரி மாதம் மட்டும் 3,792 மாணவர்கள் அழைத்துசெல்லப்பட்டனர். சென்ற ஆண்டு ஜூன் மாதம் 21–ந் தேதி முதல் இன்று வரை 26, 310 மாணவர்கள், மெட்ரோ ரெயிலில் விழிப்புணர்வு பயணமாக அழைத்து செல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.